# தடாதகைப் பிராட்டியார்



பாண்டிய நாட்டை மலையத்துவசன் என்னும் மன்னன் ஆண்டு வந்தான். அவன் மனைவி காஞ்சனமாலை. இருவரும் சிவபக்தியில் சிறந்தவர்கள். இவ்விருவருக்கும் சகல செல்வங்கள் இருந்தும் குழந்தைச் செல்வம் இல்லாதது பெரும் குறையாக இருந்தது. இதனால் மலையத்துவச மன்னன் சிவபெருமானிடம் குழந்தை வரம் வேண்டி யாகம் செய்தான். அந்த யாகத்தீயிலே உமாதேவியார் அழகிய பெண் குழந்தையாகத் தோன்றினார்.

மலையத்துவச மன்னனும் காஞ்சனமாலையும் அளவில்லா ஆனந்தம் அடைந்தனர். காஞ்சனமாலை அப்பெண் குழந்தையை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டாள். மன்னன் அக்குழந்தைக்குத் தடாதகை என்று பெயரிட்டான். தடாதகைக்கு யானையேற்றம், குதிரையேற்றம், விற்போர், வாட்போர் முதலான அரசகுமாரருக்கு உரிய பயிற்சிகளைப் பயிற்றுவித்தான்.



மலையத்துவச பாண்டியன் தடாதகைக்குப் பட்டாபிஷேகம் செய்வித்தான். நாட்டை ஆளும் பொறுப்பைத் தடாதகை ஏற்றார். வயது முதிர்ச்சி காரணமாக மலையத்துவசன் சிவபதம் அடைந்தான். தடாதகை பல நாட்டு மன்னர்களுடன் போர்புரிந்து பல வெற்றிகளைப் பெற்றார். ஒருமுறை திருக்கைலாயமலையைச் சுற்றித் தடாதகையின் படைகள் அணி வகுத்து நின்றன. அங்கே சிவபெருமான் இடபவாகனத்திற் காட்சியளித்தார். போர்க்கோலம் பூண்டு வந்திருக்கும் தடாதகையைப் பார்த்துப் புன்முறுவல் செய்தார். நாணமடைந்த தடாதகை தன் படைகளுடன் பாண்டிய நாட்டுக்குத் திரும்பினார்.



சிவபெருமான் சுந்தரபாண்டியராக மதுரைக்கு வந்தார். குறித்த நன்னாளில் தடாதகையைத் திருமணம் செய்தார். காஞ்சனமாலை சிவபெருமானை வணங்கி "சுவாமி தடாதகையைத் திருமணம் புரிந்தது போல் இப்பாண்டிய நாட்டையும் அரசு செய்ய வேண்டும்" என்று பணிவுடன் வணங்கி நின்றாள்.

சிவபெருமான் சோமசுந்தர பாண்டியராகவும், தடாதகை மீனாட்சியாகவும் விளங்கினர். நல்ல அரசாட்சியை எப்படி நடாத்த வேண்டும் என்பதை இவர்கள் இருவரும் நடாத்திக் காட்டினர். மக்கள் இவர்களுடைய ஆட்சியில் பல சிறப்புகளையும் பெற்று மகிழ்ந்தனர்.

**"வேண்டுவோர்க்கு வேண்டுவதை இறைவன் தருவான்"**

## பயிற்சி

**சுருக்கமான விடை எழுதுங்கள்.**

(1) மலையத்துவச மன்னன் ஏன் யாகம் செய்தான்?
(2) யாகத்தீயிலே குழந்தையாகத் தோன்றியது யார்?
(3) மலையத்துவசன் அக்குழந்தைக்கு இட்ட பெயர் யாது?
(4) தடாதகைக்கு இளமைப்பருவத்தில் வழங்கப்பட்ட பயிற்சிகள் யாவை?
(5) சுந்தர பாண்டியனாக மதுரைக்கு வந்தது யார்?
(6) தடாதகை யாரைத் திருமணஞ் செய்தார்?

## செயற்பாடு

* சிவபெருமான் படத்தை வரைந்து அதற்கு வர்ணந் தீட்டுங்கள். படத்தை வரையும்போது சிவனை நினைத்துக் கொள்ளுங்கள்.